08. திரைப்படப் பாதுகாப்பு	1,610,655	-	-	1,610,655	1,159,645	97,279	1,256,924	353,731
09. சைக்கிள்கள்	18,281	-	-	18,281	18,277	-	18,277	4
10. திரைப்பட உபகரணங்கள்	910,689	-	-	910,689	713,550	49,280	762,830	147,859
11. புறத்தெறிவு உபகரணங்கள்	925,202	-	-	925,202	553,730	50,209	603,939	321,263
12. திரையறங்கு இயந்திரங்கள்	93,301,972	457,020	-	93,758,992	79,837,974	5,997,289	85,835,263	7,923,729
13. திரைப்படக் கல்வி உபகரணங்கள்	1,241,350	-	-	1,241,350	886,540	75,204	961,744	279,606
14. நலன்புரி உபகரணங்கள்	210,677	-	-	210,677	196,531	1,572	198,103	12,574
	591,059,628	**25,619,946**	**7,914,941**	**608,764,633**	**243,167,755**	**25,755,076**	**268,922,831**	**339,841,802**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான
நிதி நிலைமைக்கான குறிப்பு

			2018		2017
			ரூபா.		ரூபா.
குறிப்பு : 12					
நீண்ட கால முதலீடு					
நிலையான வைப்புக்கள்			21,461,312		19,562,022
வ/ப ஐக்கிய பத்திரிகைகள் நிறுவனம்			127,000		127,000
			21,588,312		**19,689,022**
குறிப்பு : 13					
குறுகிய கால முதலீடு					
தேசிய சேமிப்பு வங்கியின் வைப்புச் சேவைகள்			5,000		5,000
ரிபோ வைப்புக்கள்			187,811,682		173,097,656
திரைசேறி உண்டியல்கள்			108,004,238		100,117,116
			295,820,920		**273,219,772**
குறிப்பு : 14					
பங்குகள்					
திரைப்படங்கள்			5,253,887		5,253,887
வர்த்தக நடவடிக்கைகள்			4,868,282		4,206,990
கலையரங்கம்			1,697,363		1,697,363
கலையரங்கு பராமரிப்பு உதிரிப் பாகங்கள்			1,472,575		1,472,575
காகிதாதிகள் மற்றும் ஏனையவை			1,355,399		1,369,045
			14,647,506		13,999,860
மெதுவாக விற்பனையாகும் மற்றும் விற்பனையாகாத பங்குகளுக்கான ஒதுக்கீடுகள்			(8,597,176)		(8,597,176)
			6,050,330		**5,402,684**
குறிப்பு : 15					
கடனாளிகள்					
திரையரங்குகள்	348,893,245			301,745,885	
^-& அறக்கட்ளைளை ஒதுக்குதல்	(134,159,069)			(119,490,277)	
^-& கடனாளிகளுக்காக வேண்டி சேதப்ப	(110,944,780)		103,789,396	(86,668,793)	95,586,815
தயாரிப்பாளர்கள்	92,109,979			92,928,307	
^-& தயாரிப்புக் கடன் வட்டயை ஒதுக்குத	(4,618,806)			(4,618,805)	
^-& கடனாளிகளுக்காக வேண்டி சேதப்ப	(63,906,276)		23,584,897	(66,664,593)	21,644,909
			127,374,293		**117,231,724**
குறிப்பு : 16					
பல்வகைக் கடனாளிகள்					
ஏனைய			176,195,054		162,747,665
பல்வேறு கடனாளிகளுக்காக வேண்டி சேதப்படுத்துத			(8,809,753)		(8,137,000)
பணியாளர் முற்பணம்			23,350,831		21,239,522
பணியாளர் கடன் சொத்துக் கணக்கு			3,224,642		12,289,064
(-) பணியாளர் கடன் பொறுப்புக் கணக்கு			(3,224,642)		(12,289,064)
			190,736,132		**175,850,187**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான
நிதி நிலைமைகள் தொடர்பான குறிப்பு

சந்தேகமான கடன்களுக்கான ஒதுக்கீட்டு அட்டவணை

குறிப்பு : 16 ஏ

கடனாளிகள்	மொத்தம் 2016	க்கப்பாடில்லாத மறவிட்டுக் கொள்ட.டுக் கொள்ள முடிய	5% ஒதுக்கீடுகள் முடிந்தவை	மாத்த ஒதுக்கீடுகள்	
	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.
திரையரங்குகள்	348,893,245	98,421,177	250,472,068	12,523,603	110,944,780
தயாரிப்பாளர்கள்	92,109,979	62,421,871	29,688,108	1,484,405	63,906,276
ஏனையவை	176,195,054		176,195,054	8,809,753	8,809,753
பணியாளர் கடன்	23,346,291		23,346,291		
	640,544,569	**160,843,048**	**479,701,521**	**22,817,761**	**183,660,809**

நிலுவை முன் / கொ	161,470,386	86,668,793	66,664,593	8,137,000	
இலாபங்களை இலாபக் கணக்கி	22,190,423	24,275,987	(2,758,317)	672,753	
	183,660,809	**110,944,780**	**63,906,276**	**8,809,753**	**-**

கடனாளிகளுக்காக வேண்டி சேதப்படுத்துகை	
சீராக்கங்கள் 2018.01.01 ஆந் திக	161,470,386
இலாபங்களை இலாபக் கணக்கி	22,190,423
நிலுவை பின்/கொ செல்லப்பட்ட	**183,660,809**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
நிதி நிலைமைகள் தொடர்பான குறிப்பு

	2018	2017
	ரூபா.	ரூபா.
குறிப்பு : 17		
வைப்புக்கள் மற்றும் முன் கொடுப்பனவுகள்		
வைப்புக்கள்	4,209,588	3,768,432
முற்பணக் கொடுப்பனவுகள்	321,574	800,719
	4,531,162	4,569,151
கிடைக்கப் பெறாத கடனுக்காக வேண்டி சேதப்படுத்தி	(653,728)	(653,728)
	3,877,434	**3,915,423**
குறிப்பு : 18		
நிதி மற்றும் வங்கி நிலுவைகள்		
மக்கள் வங்கி - ந. க. இ. 004-1-001-1-0208647	1,585,453	1,325,524
மக்கள் வங்கி - ந. க. இ. 055-1-001-5-0667533	2,124,340	901,745
மக்கள் வங்கி - ந. க. இ. 004-1-001-6-0208664	7,166,206	19,019,734
இலங்கை வங்கி - ந. க. இ. 0002323272	4,863,086	7,074,511
இலங்கை வங்கி - ந. க. இ. 0002323131	952,745	1,594,638
இலங்கை வங்கி - ந. க. இ. 0002323354	6,296,658	19,940,390
இலங்கை வங்கி - ந. க. இ. 0002323363	6,715,678	25,572,737
இலங்கை வங்கி - ந. க. இ. 0005002189	5,223,378	15,120,013
இலங்கை வங்கி - ந. க. இ. 0005152460	976,303	-
	35,903,847	90,549,292
கையிருப்பில் மீதமுள்ள நிதி		
சில்லறைத் தொகை - பிரதான அலுவலகம்	48,971	35,345
சில்லறைத் தொகை - கலையரங்கம்	(4,805)	4,297
சில்லறைத் தொகை - திரைப்படக் களஞ்சியசாலை	34	34
	44,200	39,676
மொத்தம்	**35,948,047**	**90,588,968**
குறிப்பு : 19		
வழங்கல்கள்		
திரைசேறி வழங்கல்கள்	124,349,919	146,322,543
(-) கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைத்தல்	(20,168,009)	(21,972,624)
	104,181,910	**124,349,919**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
நிதி நிலைமைகள் தொடர்பான குறிப்பு

	2018	2017
	ரூபா.	ரூபா.
குறிப்பு : 20		
பணிக்கொடை ஒதுக்குதல்		
முன் கொண்டுவரப்பட்ட நிலுவை - 2018.01.01	40,228,205	35,932,903
2017 ஆம் வருடத்திற்கான உயர் ஒதுக்கீடு	-	(102,235)
வருடத்திற்கான ஒதுக்கீடு	7,131,374	6,626,608
நிதிச் செலுத்தகை	(4,208,523)	(2,229,071)
	43,151,056	**40,228,205**

(திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.)

குறிப்பு : 21		
வைப்புக்கள்		
என். எப். சீ. திரையரங்குகளில் பிணை வைப்பு	295,272	310,000
சிற்றூண்டிச் சாலை வைப்பு	30,000	30,000
பாதுகாப்ட திரையரங்கு	2,326,727	2,326,727
பணியாளர்கள்	5,000	5,000
திரைப்பட இறக்குமதி	7,500	7,500
திரைப்பட செயற்திட்டம்	45,000	45,000
சுகாதாரச் சேவைகள்	260,000	160,000
	2,969,499	**2,884,227**

குறிப்பு : 22		
திரைப்பட வாடகை கடனாளிகள்		
திரைப்பட வாடகை கடனாளிகள்	271,145,270	276,979,852
(-) கடனாளிகளுக்காக வேண்டி சேதப்படுத்திய சீராக்கம்	(18,046,804)	(18,046,804)
	253,098,466	**258,933,048**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
நிதி நிலைமைகள் தொடர்பான குறிப்பு

	2018	2017
	ரூபா.	ரூபா.
குறிப்பு : 23		
ஏனைய கடன் உரிமையாளர்கள்		
பெருகிய செலவுகள் (நிதி அறிக்கையின் குறிப்பு 2.10 இன் கீ	63,895,493	25,238,340
செலுத்தப்பட வேண்டிய சேர்க்கப்பட்ட பெறுமதியின் மீதான	152,613	152,613
கணக்காய்வுக் கட்டண ஒதுக்கீடு	2,515,795	2,286,720
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் (முத்திரை)	75,022	81,447
உரிமை கோரப்படாத ஊதியம்	944,912	998,494
ஊழியர் சேமலாப நிதியம்	656,726	666,426
ஊழியர் நம்பிக்கை நிதியம்	72,955	74,278
பல்வேறு கடன் வழங்குநர்	759,853	752,877
(-) செலுத்தப்படாத பொறுப்புக்களுக்கான ஒதுக்கீடுகள்	(644,840)	(644,840)
பல்வேறு கடனாளிகள் (வரவு நிலுவை)	-	-
திரைப்பட வாடகை கடனாளிகள்	-	-
பொதுத் திறைசேரி	5,000,000	5,000,000
தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம்	3,557,545	3,650,545
ரித்மா சபை நிர்வாகக் கணக்கு	5,542,572	5,763,596
சினே தரு புஞ்சி தாரகா	-	-
திரைப்பட விழாவிற்கன ஒதுக்கீட்டுக் கணக்கு	35,304	33,564
சம்பளம் மற்றும் ஊதியங்களை ஒதுக்குவதற்கான கணக்கு	550,887	550,887
கிடைக்கப்பெற வேண்டிய தயாரிப்புக் கடன் வட்டியினை ஒத	1,028,122	1,506,922
நலன்புரிச் சங்கத்தின் மரண நன்கொடை முற்பணம்	46,150	4,950
பகிரங்க தனிக்கை கட்டுப்பாட்டுச் சபை	682,973	682,973
திரைப்பட மறுசீரமைப்பு	2,446,017	-
	87,318,099	**46,799,792**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

2018.12.31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கானது

விளக்கமான வருமானக் கூற்று

2018.12.31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான வருமானக் கூற்று

		SLFRS 2017 ரூபா.	விட முடியும மாற்றங்கள் ரூபா.	SLFRS 2017 ரூபா.
விற்பனை	குறிப்பு 01	50,118,541	87,150	50,031,391
குறைக்கப்பட்டுள்ளது : விற்பனைச் செலவு	குறிப்பு 02	(3,173,435)	141,966	(3,031,469)
மொத்த இலாபம்		46,945,106	54,816	46,999,922
குறைக்கப்பட்டுள்ளது : செலவு				
பணியாளர் ஊதியம்		80,622,539		80,622,539
பயண மற்றும் பிழைப்பூதியக் கொடுப்பனவு		1,414,583		1,414,583
வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள்		7,475,827		7,475,827
புதுப்பித்தல் பராமரித்தல் மற்றும் தேய்வுறுதல்				
(ஏ) பதுப்பித்தல் பராமரித்தல் மற்றும் தேய்வுறுத	குறிப்பு 03	29,380,892	-	29,380,892
போக்குவரத்து, தொடர்புகள், தேவைப்பாடுகள் மற்றும் ஏன		24,672,336	301,354	24,370,982
அறவிடமுடியாக் கடனிற்காக நிதி ஒதுக்கீடு செய்தல்		14,736,803		14,736,803
பணிக்கொடையினை ஒதுக்குதல்		6,626,608		6,626,608
திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர் நிதியத்திற்காக ஒதுக்குதல்		500,000		500,000
தேசிய திரைப்பட விழாவிற்கான நிதி ஒதுக்கீடு		-		-
		165,429,588	356,170	165,128,234
செயற்பாட்டு இலாபம் / நட்டம்		(118,484,482)		(118,128,312)
சேர்க்கப்பட்டுள்ளது : ஏனைய வருமானங்கள்	குறிப்பு 04	66,514,077	1,003,799	65,510,278
வருடத்தின் இலாபம் / நட்டம்		(51,970,405)		(52,618,034)
குறைக்கப்பட்டுள்ளது : திரைசேறியில் இருந்து கிடைக்கப்		81,000,000		81,000,000
வரிக்கு முன்னரான இலாபம்		29,029,595		28,381,966
குறைக்கப்பட்டுள்ளது - வரிக்கான நிதி ஒதுக்கீடுகள்		-		-
குறைவானது $ மிகையானது		**29,029,595**	**647,629**	**28,381,966**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
குறிப்பு

இணைப்பு

குறிப்பு	விளக்கம்	தொகை ரூபா. சதம்.
குறிப்பு 01	கலையகச் சேவைக்காக மேலதிகமாக பெற்றுக் கொண்ட தொகை	(87,150)
குறிப்பு 02	2017 ஆம் ஆண்டின் கையிருப்பு குறைவாக கணக்குப் பதியப்பட்டுள்ளது	141,966
குறிப்பு 03	காசோலைகளை இரத்துச்செய்தல் (130097.8+37500)	301,354.00
குறிப்பு 04	கணக்குப் பதிவினை நிவர்த்தி செய்தல் (213213+4456.69)	(1,003,796)
		(647,626)
குறிப்பு ஏ	**பெருகிய இலாபத்தை சீராக்கல்**	
	கணக்குப்பதியப்படாத செலுத்தப்பட வேண்டிய நிலுவை ஊ.சே. நி.	30,529,142
	கணக்குப் பதியப்படாத செலுத்தப்பட வேண்டிய ஊ.ந.நி.	4,163,064
		34,692,206

தலைவர்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்று

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான தகுதியுடைய கூற்று, அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்ற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்காக அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் விளைவுகள் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகையையும் காசுப் பாய்ச்சிலினையும் இலங்கை கணக்கீட்டு தர நியம அடிப்படைகளுக்கு அமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு தர நியமங்களின் படி ஏற்புடையதற்றதாக காணப்படுகின்றமை.

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) இலங்கை கணக்கீட்டு தர நியமத்தின் 7 இன் 7 ஆம் பந்தியின் படி, திறைசேரி உண்டியல்கள் மற்றும் முகப்பு விற்பனை உண்டியல்களை கணக்கிடும் போது 3 மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த முதலீடொன்றினைக் காசுப் பாய்ச்சல் அறிக்கையில் காசை ஒத்த திரவ சொத்தொன்றாக எடுத்துக் காட்டப்பட்டாலும் மூன்று மாத காலப்பகுதியினுள் முதிர்ச்சியடைவதற்குள்ள திறைசேரி உண்டியல்களின்

பெறுமதி ரூபா. 9,669,041 உம் மற்றும் திறைசேரி உண்டியல்கள் முகப்பு விற்பனை (Repo) ரூபா. 103,293,173 ஆன தொகை மற்றும் காசை ஒத்தவைகளின் கீழ்க் காட்டப்பட்டிருக்க வில்லை.

(ii) இலங்கை கணக்கீட்டு தர நியமத்தின் 16 இன் 79 (அ) ஆம் பந்தியின் படி, நடப்பு அல்லாத சொத்துக்கள் பற்றி நிதிக் கூற்றுக்களில் தேறிய புத்தகங்களின் பெறுமதியை வெளிப்படுத்த வேண்டியிருந்தும் கூட்டுத்தாபனத்தின் களணிய கலையகத்தின் வெள்ளைக் கருப்பு மற்றும் வர்ண இரசாயன கூடங்களுக்குரிய தொழில்நுட்பம் மற்றும் காலங்கடந்த பழைய சொத்துக்கள், கணக்கிடப்படல் மற்றும் அது பற்றிய வெளிப்படுத்தல்களை மேற்கொண்டிருக்கவில்லை.

(iii) இலங்கை கணக்கீட்டு தர நியமத்தின் 19 இன் 57 ஆம் பந்தியின் படி, உண்மையான மதிப்பீட்டினை மேற்கொண்டு பின்னைய ஊழியர் நலன்களின் ஒதுக்கீடுகளை கணக்கிட வேண்டும் என்றாலும், அதற்கு மாற்றமாக கூட்டுத்தாபனத்தினால் முன்னை ய ஊழியர் நலன்களை ஒதுக்குவதற்காக கணக்கீட்டுக் கொள்கையொன்றினை இனங்காணாமல் ஒவ்வொரு ஊழியருக்கும் சேவையாற்றிய வருடமொன்றில் மாதத்தின் அரைவாசி சம்பளத்துக்குச் சமனான பணிக்கொடை தொகை ஒதுக்கப்பட்டிருந்தது.

(iv) இலங்கை கணக்கீட்டு தர நியமத்தின் 38 இன் 119 ஆம் பந்தியின் படி, களணிய சரசவி கலையகத்தின் பின்னைய தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் மென்பொருள் நிதிக் கூற்றுக்களில் புலனாகாத சொத்துக்களின் கீழ்க் காட்டப்பட்டிருக்கவில்லை.

(v) இலங்கை கணக்கீட்டு தர நியமத்தின் 40 இன் 75 (இ) ஆம் பந்தியின் படி, முதலீட்டுச் சொத்துக்களை அடையாளங் கண்டு கணக்கிடப்படல் வேண்டும் என்றாலும் கூட்டுத்தாபனத்தினால் 16 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கட்டுப்பாட்டுச் சபைக்கு, செலசினே நிறுவனத்திற்கு மற்றும் சார்க் கலாசார நிலையத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள கட்டிடம் தொடர்பாக உசிதமான தெளிவுபடுத்தல்கள் எதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான இருப்பு

1999 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திடம் இருந்த திரைப்பட விநியோகத்தின் ஏகபோக உரிமை இரத்துச் செய்யப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்திடம் காணப்படும் பிரதான வருமான வழியாக இருந்த விநியோக முகவர் சேவைக் கட்டணம் இழக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு போதாமை காரணமாக பொதுத் திறைசேரியினால் 2001 ஆம் ஆண்டிலிருந்து ஊழியர் சம்பளத்திற்கான ஒதுக்கீட்டுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வு ஆண்டு மற்றும் முன்னைய 4 வருட காலத்தினுள் திறைசேரியின் நிதியினைக் பெறுவதற்கு முன்னர் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியான நட்டத்தினை எதிர்கொண்டு வந்துள்ளதால் அரசின் நிதியுதவிகள் எதுவுமின்றி கூட்டுத்தாபனத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதில் நிச்சயமற்ற தன்மை காணப்படும் என அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

சொத்துக்களை கணக்கிடும் கொள்கை செலவுகளுக்கு அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியில் என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள வரிப்பண இலக்கம் 224 இனைக் கொண்ட காணி

மற்றும் களணிய கலையகத்தின் காணி மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியை கணக்கில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) தீர்க்கப்படாத கணக்கு நிலுவைகள்

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) கூட்டுத்தாபனத்தினால் திரைப்பட நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்ளுக்கான நிதியம், திரைப்பட மேம்பாட்டு நிதியம் மற்றும் ரித்மா சபையுடன் பேணிச் செல்லப்படும் 03 நடப்புக் கணக்குகள் மற்றும் அந்நிதியங்களின் நடப்புக் கணக்குகளிடையே 2018 திசெம்பர் 31 ஆந் திகதி நடைபெற்ற தெளிவுபடுத்தப்படாத நிலுவை மாற்றங்களின் மொத்தம் ரூபா. 9,117,914 ஆகும்.

(ii) நிதிக் கூற்றுக்களுக்கமைய சம்பளம் மற்றும் வேதனம், ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை, சேவை ஊழியர்களின் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை மற்றும் பிற கொடுப்பனவுகளாக ரூபா. 75,776,603 ஆன தொகை வரை இருந்தாலும் மாதந்த சம்பளப் பட்டியலின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப அது ரூபா. 67,693,662 ஆனதால் ரூபா. 8,082,941 ஆக மாற்றமடைந்தது.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழ அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் கட்டுப்பாட்டுத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிநிலை அறிக்கைகள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற வகையிலும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகக் காணப்படுவதோடு, முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் என்ற அடிப்படையில் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைப்பாட்டுக்குரிய விடயங்களை கண்டறிவதற்கும் முகாமைத்துவம் பெறுப்பாக இருக்கும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையுடன் தொடர்புடைய பொறுப்புக்கள், ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும், மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும், குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தவாதப்படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுக்கள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும் . பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துவதாயின் அவை முக்கியமானவை என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்விடல் நியம தரங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் சந்தேகங்கள் நிலவுவதாகவும் காணப்படுகின்றது. மேலும்,

- நான் மோசடி அல்லது தவறின் காரணத்தினாலான நிதிக் கூற்றுக்களின் முக்கியமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்காணல் அல்லது மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களின் போது உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு மோசடி அல்லது தகவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துக்களை விடுவித்துக் கொள்வதற்கும், போதிய மற்றும் உசிதமான கணக்காய்வுச் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எனது அபிப்பிராயத்தின் அடிப்படையாகவும் உள்ளது.மோசடியின் விளைவினாலான ஆனால் கண்டறியப்படாத முக்கிய பிறழ் கூற்றின் ஆபத்தானது தவறினாலான ஆபத்தினை விடவும் மிகவும் பாரதூரமானது. ஏனெனில், மோசடியானது கூட்டுச் சக்திக்கும் , உள்நோக்குடைய புறக் கணிப்புக்களுக்கும், பிறழ் கூற்றுக்களுக்கும் அல்லது உள்ளக கட்டுப்பாடு மீறப்படுவதற்கும் காரணமாக அமையும்.

- கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் வினைதிறன் தொடர்பான கருத்தினை முன்வைக்கும் நோக்கத்திற்கல்லாது, சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறைகளை திட்டமிடுவதற்காக கணக்காய்வுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கத்தினை நான் பெற்றுக்கொள்கிறேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டினையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தையும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் நான் மதிப்பீடு செய்கிறேன்.

- நிறுவனமாக தொடர்வதற்கு இயலுமையில் குறிப்பிடத்தக்க சந்தேகம் ஏற்படுத்தும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய முக்கியமான நிச்சயமற்ற தன்மை காணப்படின், கணக்கீட்டின் படி இயங்கும் நிறுவன அடிப்படையை முகாமை பயன்படுத்தும் விதத்திற்கேற்பவும் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் படியும் முடிவெடுக்கின்றேன். முக்கியமான ஏதோவொரு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் முடிவெடுத்தால் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களுக்கான

எனது கணக்காய்வாளர் அறிக்கையில் உரிய கவனம் செலுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுவதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியளவில் இல்லாதிருந்தால் எனது கருத்தை மாற்றுமாறு நான் வேண்டப்படுவேன். எனது முடிவுகள் யாவும் எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையில் நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையிலேயே இருக்கும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைகள் நிறுவனம் இயங்கும் நிறுவனமாக தொடர்வதிலிருந்தும் நிறுத்தப்படுவதற்கு காரணமாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு றெய்யப்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையான பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

  எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட உள்ள கட்டுப்பாட்டிலிருந்த குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கலாக ஏனைய விடயங்களுடன் குறிப்பிடத்தக்க கணக்காய்வுத் தேடல்கள் தொடர்பாக சாட்டப்பட்டுள்ளவர்களுடன் நான் கலந்துரையாடுகிறேன்.

2. பிற சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

கீழுள்ள தேவைப்பாடுகளுக்காக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவு தவிர்த்து, கணக்காய்விற்காக அவசியப்படும் சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் காட்டும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டிருந்தன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்தினால் முன்னளிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப இவ்வறிக்கையில் 1.2 (அ) (ii), 1.2 (அ) (iii), 1.2 (அ) (iv), 1.2 (அ) (v), 1.2 (ஆ), 1.2 (இ), 3 (அ) (ii) மற்றும் 3 (அ) (1v) ஆம் பந்தி தவிர்ந்து முந்திய வருடங்களில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளையும் உள்ளடக்கியே நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்படும் செயன்முறைகள் மற்றும் பெற்றுக் கொண்ட சான்றின் அடிப்படையில் மற்றும் போதியளவிலான விடயங்களுக்கு வரையறை செய்வதன் மூலம், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன்வைக்கும் அளவுக்கு எதுவும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் ஏவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஏதேனும் ஒரு ஒப்பந்தம்

தொடர்பாக நேரடியாக அல்லது வேறு விதத்தில் சாதாரண வியாபார ஏதுக்கு அப்பால் தொடர்பு உள்ளதாகவும்,

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்த்து ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புகளுடன் இணங்கியொழுக வில்லை என கூறுவதற்கும்,

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிக் குறிப்பு	விபரம்
(அ) 1971 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10(5) மற்றும் 11 ஆம் பிரிவு	2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய வருமான மிகை ரூபா. 141,934,127 ஆன தொகை திறைசேரிக்கு வழங்கப்படவில்லை என்பதோடு, நிதி அமைச்சரின் மற்றும் உரிய அமைச்சரின் அனுமதியின்றி ரூபா. 108,004,238 உம் மற்றும் ரூபா. 187,811,682 ஆன தொகையும் ஒழுங்கு முறையில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் முகப்பு விற்பனைகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.
(ஆ) 1971ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 7(2) ஆம் பிரிவு	மீளாய்வு ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா. 63,850,000 ஆன அரசின் உதவித் தொகை கூட்டுத்தாபனத்தின் இலாப / நட்டங்களைக் கணக்கிட்டதன் பின்னர் விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.
(இ) 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆந் திகதிய தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் வழிகாட்டல் 9 ஆம் பந்தி	திரைப்படக் காப்பகமொன்றை நிறுவி அதன் முகாமைத்துவத்தினை கூட்டுத்தாபனத்தினால் பேணிச் செல்லப்பட வேண்டியிருந்தும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 273 பழைய திரைப்படங்களை ஆவணக் காப்பகத் திணைக்களத்தின் காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த்தோடு 1974 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் திரையிடப்பட்ட 987 திரைப்படங்கள் மற்றும் புதிய திரைப்படப் பிரதிகளையும் பாதுகாப்பதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண குறிப்பின் நி.பி. 381(1)	கடமை வங்கிக் கணக்கினை திறப்பதற்காக பிரதான கணக்களிக்கும் அதிகாரியின் மூலம் பொதுத் திறைசேரியின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி திறைசேரியின் அனுமதியின்றி 09 வங்கி நடப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அத்திகதிக்கு வங்கிக் கணக்குகளில் மொத்தம் ரூபா. 35,903,847 ஆன தொகை நிலுவையாக காணப்பட்டது.
(உ) 2003 ஜூன் மாதம் 02 ஆந் திகதி மற்றும் பிஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சி சுற்றறிக்கை	நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக் கூற்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்றாலும்அந்நிதிக் கூற்று 05 மாதங்கள் 07 நாட்கள் தாண்டி தாமதமாக 2019

	ஆகஸ்ட் மாதம் 07 ஆந் திகதி முன்னளிக்கப்பட்டிருந்தது.
(ஊ) 2014 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் வரிச் சட்டத்தின் 4(1) (ஆ) ப் பிரிவு	சேவை வழங்கலில் முற்பணக் கொடுப்பனவிற்காக சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் வரி செலுத்தப்பட வேண்டியிருந்தும் கூட்டுத்தாபனத்தினால் முற்பணத் தொகைக்காக சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் வரி அறவிடப்படாமல் 2019 ஆகஸ்ட் மாதம் 07 ஆந் திகதி சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் வரிக்கு மட்டும் ரூபா. 4,357,404 ஆன தொகையை பற்றுச்சீட்டொன்று தயாரிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 12 (எ) பிரிவின் படி தேவைப்பாட்டுக்கு ஏற்ப கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த கூட்டுத்தாபனத்தின் அதிகாரம், தத்துவங்கள் மற்றும் அதன் தொழிற்பாடுகளுக்கு இணங்காத வகையில் தொழிற்பட்டுள்ளது எனக் கூறுவதற்கும்.

(அ) அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2006 ஜனவரி மாதம் முதல் 2015 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை கருத்திற் கொள்ளாமல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையை கணக்கிடப்படுவதன் காரணமாக சேவை வழங்குநரின் பங்களிப்பு ரூபா. 12,211,657 ஆகவும், ஊழியரின் பங்களிப்பு ரூபா. 8,141,105 ஆகவும் மற்றும் அதனடிப்படையில் மேலதிகக் கட்டணமாக ரூபா. 10,176,381 ஆன தொகையை செலுத்தப்படவுள்ளதாக வழக்குத் தொடர்வதற்கு முன்னர் செய்யப்படும் இறுதி அறிவித்தல் மூலம் அறியப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ஊழியர்களின் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை ரூபா. 2,763,753 ஆகவும் மற்றும் அதனடிப்படையில் மேலதிகக் கட்டணம் ரூபா. 1,381,876 ஆகவும் அறவிடப்படல் வேண்டும் என கூட்டுத்தாபனத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி கடந்த வருட சரிசெய்தலாக முழுச் செலுத்துகையான ரூபா. 34,674,772 ஆன தொகை நிதிக் கூற்றுக்களில் நிதி ஏற்பாடாக காட்டப்பட்டுள்ளது. மேலும் மேலதிகக் கட்டணமாக ரூபா. 11,558,257 ஆன தொகை திறைசேரிக்கு செலவுச் சுமையாகவன்றி செலுத்துமாறு அரச தொழில்முயற்சித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தும் அதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கள் தவிர்ந்த கூட்டுத்தாபனத்தின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த்தாகவும் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் உரித்துடைய சட்ட விதிகளுக்கு ஏற்புடையதாக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படவில்லை எனவும்,

(அ) பெறுகை நடவடிக்கைக்கான வழிகாட்டுதலில் இருந்து நீங்கியிருத்தல்.

மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 5.6 மில்லியனான அலுவலக மரத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கை குறித்து 2006 இல் பெறுகை வழிகாட்டல் ஏற்பாடுகளை பிற்பற்றி இருக்காமை, வழங்கப்பட்டிருந்த மரத் தளபாடங்கள் உரிய செலவுகளுக்கு இணங்காமை மற்றும் அளிப்பாணை அளவுக்கு

உரிய காலத்தில் வழங்கியிருக்காமை போன்ற காரணங்களினால் பெறுகை நடவடிக்கை 2019 ஜூலை மாதம் 30 ஆந் திகதியில் முழுமைப்படுத்த முடியாமல் போயுள்ளது.

3. பிற அவதானங்கள்

(அ) பெறத்தக்க மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

(i) திரைப்படத் தயாரிப்பிற்காக திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு 1975 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் செலுத்தப்பட்ட கடன் தொகையிலிருந்து 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ரூபா. 71.32 மில்லியன் அறவிடப்படவேண்டிய நிலுவையாக காணப்பட்டது. அக்கடன் தொகையிலிருந்து ரூபா. 25.10 மில்லியன் திரைப்படத் தயாரிப்பிற்காக பயன்படுத்தப்படவில்லை எனவும் ரூபா. 8.29 மில்லியன் நிலுவையில் உள்ள கடன் மிகுதிக்குரிய தயாரிப்பாளர்கள் மரணித்துள்ளதன் காரணமாக கடன்களை அறவிட்டுக் கொள்வதில் நிச்சயமற்ற தன்மை நிலவியது. 10 வருடங்களுக்கு மேலாக காலம் கடந்துள்ளதனால் கடனை அறவிட்டுக் கொள்வதில் சட்டரீதியான திறன் குறைவடைந்திருந்தது. அத்தோடு திரைப்படக் கூட்டுத்தாபனத் திரைப்படங்களின் உரிமை மாற்றப்பட்டு ரூபா. 11.84 மில்லியனாக இருந்த நிலுவையில் உள்ள கடன் மிகுதியை பதிவழிப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் அந்நடவடிக்கையை செயற்படுத்துவதில் பலவீனம் காணப்பட்டதால் அது நடைபெறவில்லை.

(ii) மருதானை சினேசிடி திரையரங்கின் மூலம் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2016 மே மாதம் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டிய திரைப்பட வாடகை ரூபா. 12,343,433 வான தொகையினை 2019 ஒக்டோபர் மாதம் 15 ஆந் திகதி வரை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, 2016 மே மாதம் 31 ஆந் திகதியின் பின்னர் நாளாந்த அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை என்பதால் அறவிடப்பட வேண்டிய திரைப்பட வாடகை வருமானத்தை கணிப்பீடு செய்வதற்கும் கணக்கில் வைப்பதற்கும் முடியாமற் போயுள்ளது.

(iii) திரையரங்குகளுக்கு 2018 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட தண்டப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடியாமற் போனது.

(iv) ஊழியர்களின் ஓய்வுபெறச் செய்தல் நடவடிக்கைக்காக திறைசேரியிலிருந்து பெற்றிருந்த இழப்பீட்டுச் தொகையில் எஞ்சியிருந்த ரூபா. 5,000,000 இனை 05 வருடங்கள் கடந்திருந்தும் மீள திறைசேரிக்கு அனுப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வு ஆண்டின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு திரையரங்குத் தயாரிப்புகள், பிற கடன்கள் மற்றும் ஊழியர் முற்பணமாக மொத்த கடன் தொகை ரூபா. 640,544,569 இனை அறவிட வேண்டியிருந்தது. அக்கடனாளிகளிடமிருந்து ரூபா. 160,843,048 ஆன தொகைக்கு உடன்படாத மற்றும் அறவிடப்பட முடியாத கடன் நிலுவைக்காக நூற்றுக்கு 100 வீதம் அறவிடப்பட முடியாத கடன் ஏற்பாடாகவும், எஞ்சிய கடனாளிகளுக்காக நூற்றுக்கு 5 வீதம் அறவிடப்பட முடியாத கடன் ஏற்பாடாகவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட கடனாளிகளிடமிருந்து ரூபா. 183,660,809 ஆன தொகை அதாவது நூற்றுக்கு 29 வீதமான அளவு மீள அறவிட்டுக் கொள்வது நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பொருளாதார ரீதியற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(i) திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி உண்டியர்களின் முகப்புப் பெறுமதி ரூபா. 295,820,920 ஆன தொகையாக காணப்படுவதோடு, முதல்நிலைச் சந்தையில் அரச வங்கிகளிலிருந்து கேள்வி மனுக்கள் கோரப்பட்டு மிகவும் அநுகூலமான வட்டி விகிதத்தின் அடிப்படையில் மிகை நிதியத்தை முதலீடு செய்வதற்குப் பதிலாக ஒரு வங்கியில் தொடர்ந்தேர்ச்சியாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. +

(ii) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 224 கட்டிடங்களின் அரச வாடகை மதிப்பீடு செய்யப்பட்டதற்கமைய வாடகைக் கட்டணம் தீர்மானிக்கப்படாமல் குறைந்த வாடகை கட்டண அடிப்படையில் இரு அரச நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக 2018 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் ரூபா. 1,722,000 ஆன தொகை வருமானத்தை இழந்துள்ளது.

(இ) செயலற்ற மற்றும் குறை பயன்பாட்டுடைய சொத்துக்கள்

(i) கூட்டுத்தாபனம் மற்றும் வங்கி நடப்புக் கணக்குகள் 9 இனதும் 2018 ஆம் ஆண்டில் சாதாரண மாதாந்த நிலுவை ரூபா. 64.2 மில்லியனாக காணப்படுவதோடு அத்தொகை உற்பத்தித் திறன் வாய்ந்ததாக குறுகிய காலத்தில் முதலீடு செய்து மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்கான அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மொத்தம் ரூபா. 870,659 ஆன மொத்த திரைப்படக் காப்பு மற்றும் இரசாயன பொருட்களின் கையிருப்பு 2014 ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்படாமல் இருப்பதோடு மொத்த திரைப்படக் காப்பு காலங் கடந்துள்ளதனால் பயன்படுத்த முடியாத நிலைக்கு உட்பட்டுள்ளது.

(உ) சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு எவ்விதத்திலும் தொடர்புபடாத மற்றும் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சட்டரீதியான ஏற்பாடுகளின்றி கூட்டுத்தாபளத்தின் தலைவரினால் ரித்மா சபையின் திரையரங்குகளுக்காக பல வருடங்களாக மற்றும் ஏனைய சபைகளுக்குரிய 40 திரையரங்குகளுக்காக மீளாய்வு ஆண்டில் இருந்து நாட்டு மதுபானங்களுக்கான அனுமதி உரிமப் பத்திரங்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2019 மே மாதம் 22 ஆந் திகதிய மற்றும் அமை/19/1240/122/045 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய "சினிமா திரையரங்குகளில் மதுபான அனுமதி உரிமத்திற்காக பரிந்துரை வழங்குவதனை நிறுத்துதல்" என முடிவெடுக்கப்பட்டிருந்தாலும் அதற்கமைய அம்முடிவினை அறிவிக்கும் பொருட்டு சுற்றறிக்கையொன்று பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிறைவேற்றப்படாத திட்டங்கள்

சினிமாத் துறையின் முன்னேற்றத்திற்காக தளுகம சரசவி கலையகத்தை மேம்படுத்துதல், திரைப்பட உரையாடல்களை ஒலிப் பதிவு செய்யும் அறை, தொகுத்தமைத்தல் அறை, ஒலிக் கலவை அறை, சினிமா நூலகம், பீ.ஏ. டப்ளியூ. ஜயமான்ன அறையை நிர்மாணத்தல் போன்ற திட்டங்களுக்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா. 125 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தாலும் முகாமைத்துவத்தின் செயற்திறனின்மை மற்றும் நிதி ஒதுக்கீட்டுச் செயற்பாடு தொடர்பில் கவனம் செலுத்தாமை போன்ற காரணங்களினால் கடந்த 03 வருட காலத்திலிருந்து இலக்காகக் கொள்ளப்பட்டிருந்த அத்திட்டங்களை நிறைவேற்றப்படால் கைவிடப்பட்டிருந்தது.

(எ) உள்ளக கணக்காய்வு

அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினருக்கு ஏற்ப உள்ளக கணக்காய்வுப் பிரிவின் 03 நிரந்தர கணக்காய்வு உதவியாளர் பதவிகள் காணப்பட்டாலும், 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு எந்தவொரு உதவியாளரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. அதன் படி உள்ளக் கணக்காய்வு விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் போதுமான அவதனாம் செலுத்தப்படவில்லை என்று அவதானிக்கப்பட்டுள்ளது.


(ஏ) வருடாந்த அறிக்கையை சபைக்குச் சமர்ப்பித்தல்

2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02 ஆந் திகதிய மற்றும் இலக்கம் பிஈடி/12 இனைக் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் படி 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களின் ஆண்டறிக்கை 2019 ஒக்டோபர் மாதம் 24 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பணியாட்தொகுதியினர் நிர்வாகம்

(i) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் கூட்டுத்தாபனத்தின் பணியாட்தொகுதியினரின் வெற்றிட எண்ணிக்கை 81 ஆகக் காணப்பட்டதோடு தற்போதைய தேவைப்பாட்டின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் குறித்து மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் படி, அத்தியவசியமான 03 பதவிநிலை உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது. மேலும் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

(ii) கூட்டுத்தாபனத்தின் 08 தொழிலாளர்கள் மேலதிகமாக இருந்தாலும் கூட்டுத்தாபனத்தினை துப்புரவு செய்யும் நடவடிக்கைக்காக தனியார் நிறுவனமொன்றின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.



டப்ளியூ.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வு தலைமை அதிபதி